வாரியாகப் பூட்டுகிறார்கள். சென்னையிலே இருப்பதைப் போல கோவையிலும் பிளாக் வாரியாகப் பூட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒவ்வொரு சிறைச்சாலையிலும் அறை எப்படி அமைந்திருக்கின்றது, ஹால் எப்படி அமைந்திருக்கின்றது என்பதைப் பற்றி ஆராய்ந்து, அதன்படி அங்குள்ள அதிகாரிகளே முடிவு செய்கிறார்கள். அதைப்பற்றி தனிப்பட்டு ஏதாவது எழுதி அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும்.

பவானி நகருக்கு பெரிய மருத்துவ மனை

* 208—வினா : **திரு ஏ. எம். ராஜா :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பவானி வட்டத்தில் பவானி நகரில் பெரிய மருத்துவமனை கட்டும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

(இ) அந்தப் புதிய மருத்துவ மனையில் எத்தனை படுக்கைகள் இருக்கும் ?

(உ) புதிய மருத்துவமனை கட்டும் முயற்சியில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) 38 படுக்கைகள்.

(உ) 5 ஏக்கர் நிலத்தை வாங்கி இம்மருத்துவ மனைக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிய கட்டடத்திற்கான செயற்குறிப்பு தற்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு ஏ. எம். ராஜா : தலைவர் அவர்களே, பவானி வட்டத்தில் ஒரு பெரிய மருத்துவ மனையும் இல்லாத காரணத்தால் அங்குள்ள மக்கள் 15 மைல்களுக்கு அப்பாலுள்ள மருத்துவ மனைக்குச் செல்லவேண்டியிருக்கிற காரணத்தினால் அந்த மருத்துவ மனை கட்டும் திட்டத்தை விரைவுபடுத்தும் முறையில் அரசாங்கம் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. நா. காசிராமன் : சார், 38 படுக்கை வசதிகளுடைய ஒரு பெரிய ஆஸ்பத்திரி கட்டப்பட்டது என்று சொன்னார்கள். இப்பொழுது அந்த ஆஸ்பத்திரி இருக்கிறதா ? அதில் எவ்வளவு படுக்கைகள் இருக்கின்றன ? இந்த புதிய ஆஸ்பத்திரியின் மதிப்பீட்டு செலவு என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அங்கு ஏற்கனவே ஒரு மருத்துவ மனை இருக்கிறது. மருத்துவமனை என்று சொல்லுகிற அளவுக்கு அது இல்லை. எனவே, புதிய மருத்துவமனை கட்ட வேண்டுமென்ற செயற்குறிப்பு இருக்கிறது. அதன் மதிப்பு 7·73 இலட்சம் ரூபாய்.

திரு. ஈ. எம். நடராசன் : தலைவர் அவர்களே, பவானியில் இருக்கிற மருத்துவமனை மிகவும் மோசமான நிலையில் பார்ப்பதற்கு குதிரைக் கொட்டாய் போல் இருக்கிறது. அமைச்சர் அவர்களும் அதை வந்து பார்த்தார். மிகவும் மோசமாக இருக்கிற காரணத்தினால் அந்த மருத்துவமனையை சீர்திருத்தி, மாற்றி அமைக்கின்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மருத்துவமனை பார்ப்பதற்கு மாத்திரம் அல்ல, அங்கே இருப்பதற்குக் கூட முடியவில்லை. வேறு மருத்துவமனை கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ : தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் காச நோயாளிகளுக்குத் தனி மருத்துவமனை ஒன்றும் கிடையாது. தலைமை மருத்துவ மனையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனிப்பட்ட முறையில் கண்காணிப்பு நடத்துகிறார்கள். ஆகவே, இதிலே தனிப்பட்ட . . . . .

THIRU K. VINAYAKAM : On a point of order, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிந்தபிறகு சொல்லுங்கள்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ : காச நோயாளிகளுக்கு என்று தனிப்பட்ட மருத்துவமனையைக் கட்டி வசதி செய்து தருகின்ற உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்திடம் உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, I rise on a point of order not with a view to affect Mr. Edmund Fernando or anybody in particular in this House. When a question is tabled concerning some particular hospital, the Minister will not be able to answer supplementary questions relating to some other hospital. At that rate I can ask about Tiruttani, another member may ask about Gobichettipalayam, a third member about Palni and so on. Let us not go at a tangent and waste the time of the House. I would request you to request the Members to put supplementary questions relating to the main question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூல வினாவுக்கு அளித்த விடையை ஒட்டித் தான் துணை வினாக்கள் இருக்க வேண்டுமென்று நமது 38-வது விதி இருக்கின்றது. இருந்தபோதிலும், மாண்புமிகு அமைச்சர்கள் விரும்பினால் அதைப்பற்றியோ, வேறு எதைப்பற்றியோ, ஏதாவது சொல்ல வேண்டுமானால் சொல்லலாம். அதற்கு அவர்களுக்கு எப்போதும் உரிமை இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கப்படும்.

Underground drainage system for Kancheepuram Town.

*209 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) Whether the Kancheepuram Municipality has applied for a loan for effecting underground drainage system in their town ; and

(*b*) If so, what is the estimate thereof ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : (*a*) & (*b*) No. The investigation work in connection with the drainage scheme has been undertaken and it is in progress. The estimates will be prepared after that work has been completed.